ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2017.05.04

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - சனவரி 2017

### பொதுநோக்கு

2017இல் இலங்கையின் வெளிநாட்டுத் துறை மிதமான செயலாற்றமொன்றினை எடுத்துக்காட்டியது. அதிகரித்த இறக்குமதிச் செலவினம், ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் விளைவாக இம்மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது. எனினும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்களின் நியதிகளில் வெளிநாட்டு நாணயங்களின் பெறுகைகள் 2017 சனவரியில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் தொழிலாளர் பணவனுப்பல்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மிதமான வீதமொன்றால் வளர்ச்சியடைந்தன. அரச பிணையங்கள் சந்தையும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும் 2017 சனவரியில் தேறிய வெளிப்பாய்ச்சலைக் காட்டின.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2017 சனவரியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 865 மில்லியனாக விளங்கி, 2016 சனவரியின் ஐ.அ.டொலர் 899 மில்லியனுடன் ஒப்பிடுகையில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்து, வேளாண்மை ஏற்றுமதிகளில் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டமைக்கிடையிலும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் செயலாற்றம் முக்கியமாக குறைவடைந்தமையினைப் பிரதிபலித்தது.

மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 77 சதவீதத்திற்கு வகைகூறும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2017 சனவரியில் ஐ.அ.டொலர் 668 மில்லியனுக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு புடவைகள் மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் இரத்தினக்கல், வைரம் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றின் வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 49 சதவீதத்திற்கு வகைகூறும் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 சனவரியில் ஐ.அ.டொலர் 426 மில்லியனுக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 8.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற சந்தைகள் இரண்டிலும் ஆடைகளுக்கான கேள்வி குறைவடைந்தமையினைப் பிரதிபலித்தது. இறப்பர் உற்பத்திகள் மற்றும் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முறையே 18.7 சதவீதத்தினாலும் 28.8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமைக்கு இரண்டு விடயங்களுடனும் தொடர்பான அனைத்துத் துணை வகைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். மேலும், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி என்பனவற்றிலிருந்தான வருவாய்களும் 2017 சனவரியில் கைத்தொழில்

உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு கணிசமானளவிற்கு பங்களித்தன. எனினும், 2017 சனவரியில் பொறிகள் மற்றும் எந்திரவியல் துணைச் சாதனங்கள், அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள், அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் மரம் மற்றும் தாள் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியைக் காட்டின.

2017 சனவரியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 194 மில்லியனாக விளங்கி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 7.9 சதவீதத்தினால் அதிகரித்து, சிறு வேளாண்மை உற்பத்திகள் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை தவிர்ந்த அனைத்து துணைத் துறைகளினதும் மேம்பட்ட செயலாற்றத்தினைப் பிரதிபலித்தன. 2017 சனவரியில் வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 33.7 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்க வளர்ச்சியை காட்டியமைக்கு காரணம் சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி மற்றும் கறுவா என்பனவற்றின் மேம்பட்ட செயலாற்றமே முக்கிய காரணமாகும். மேலும், 2017 சனவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 19.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடலுணவு ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 107.3 சதவீதமான வளர்ச்சியே விசேட காரணமாகும். மொத்த ஏற்றுமதிகளில் 12 சதவீதத்திற்கு வகைகூறும் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் வீழ்ச்சி காணப்பட்டபோதும், 2016 செத்தெம்பரிலிருந்து அதிகரித்துச் செல்லும் போக்கைக் கொண்டிருந்த அதிகரித்த சந்தை விலைகளே காரணமாகும்.

2017 சனவரியில் இலங்கையின் வணிக ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பனவிளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 53 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | சனவரி 2016 (ஆ) (ஐ.அ.டொ. மில் | சனவரி 2017 (ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **716.2** | **668.0** | **(6.7)** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 464.4 | 426.3 | (8.2) |
| இதில் ஆடைகள் | 441.6 | 405.2 | (8.2) |
| இறப்பர் உற்பத்திகள் | 71.3 | 58.0 | (18.7) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 28.6 | 29.5 | 3.1 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 20.7 | 26.0 | 25.7 |
| உணவுப் பொருட்கள் குடிபானம் மற்றும் புகையிலை | 25.6 | 22.1 | (14.0) |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 30.6 | 21.8 | (28.8) |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 8.7 | 11.2 | 29.7 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 12.2 | 9.3 | (23.7) |
| அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் | 4.2 | 8.2 | 96.6 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 5.6 | 7.3 | 29.5 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 1.9 | 4.6 | 141.6 |
| ஏனையவை | 42.4 | 43.8 | 3.4 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **179.5** | **193.7** | **7.9** |
| தேயிலை | 99.4 | 101.6 | 2.1 |
| வாசனைத் திரவியம் | 22.8 | 30.4 | 33.7 |
| தேங்காய் | 24.5 | 27.3 | 11.5 |
| கடலுணவு | 15.2 | 18.2 | 19.7 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 9.5 | 7.3 | (23.7) |
| இறப்பர் | 3.5 | 5.0 | 45.1 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.8 | 2.0 | (26.9) |
| மரக்கறிகள் | 1.8 | 1.8 | 1.3 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **2.9** | **3.0** | **3.7** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **898.6** | **864.7** | **(3.8)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.

**இறக்குமதிச் செயலாற்றம்**

2017 சனவரியில் இறக்குமதிகள் மீதான செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 13.2 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,798 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு தொடர்ந்து நான்காவது மாதமாக இறக்குமதிகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான இரட்டை இலக்க வளர்ச்சியே காரணமாகும். இடைநிலைப் பொருட்கள் மீதான செலவினம் இவ்வளர்ச்சிக்கு முக்கிய தூண்டுதலாக விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் காணப்பட்டன. 2016 சனவரியிலிருந்து ஆரம்பமான, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வளர்ச்சியடைந்து செல்லும் போக்கிற்குமாறாக, 2017 சனவரியில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்துள்ளது.

2017 சனவரியில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 950 மில்லியனுக்கு 18.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகளை முக்கியமாகக் கொண்ட எரிபொருள் மீதான உயர்ந்த செலவினமே முக்கிய தூண்டுதலாக விளங்கியது. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் மீதான இறக்குமதிச செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 101.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, நாட்டில் நிலவும் வரட்சி நிலைமைகளின் விளைவாக அதிகரித்த வெப்பவலு உருவாக்கம் காரணமாக உயர்ந்தளவு இறக்குமதி செய்யப்பட்டமையும் அதேபோன்று உயர்ந்த பன்னாட்டு எண்ணெய் விலைகளும் காரணங்களாக அமைந்தன. மேலும் 2017 சனவரியில் ஐ.அ.டொலர் 64 மில்லியனாக மதிப்பிடப்பட்ட தங்க இறக்குமதி உயர்ந்த வளர்ச்சியைத் தொடர்ந்தும் பதிவுசெய்த வேளையில், அடிப்படை உலோகத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட இரும்பு மற்றும் உருக்கு கணிசமானளவில் அதிகரித்தது. இலங்கையின் இரண்டாவது முக்கிய இறக்குமதி விடயங்களான புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதிகள் 2017 சனவரியில் 0.8 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தன. எனினும், கோதுமை மற்றும் சோளம், வளமாக்கி மற்றும் மசகெண்ணெய் இறக்குமதிகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது.

2017 சனவரியில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2016 சனவரியின் ஐ.அ.டொலர் 344 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 359 மில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு உணவு, சீனியை முதன்மையாகக் கொண்ட குடிபானங்கள், அரிசி, பால் மற்றும் கிறீம் வகைகள் கருவாடு என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். மாறாக, 2017 சனவரியில் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு உந்துஊர்தி முக்கியமாகக் கொண்டு, மருந்துப் பொருட்கள் மற்றும் அச்சிடப்பட்ட பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும், இக்காலப்பகுதியில் உந்து ஈருருளிகள், வானொலிப்பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் ஆடைகளின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தது.

2017 சனவரியில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் இவ்வாண்டில் முன்னைய ஐ.அ. டொலர் 444 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 432 மில்லியனுக்கு 2.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. முக்கியமாக முச்சில்லு வண்டிகள், புடவைக் கைத்தொழில் பொறிகளை முக்கியமாகக் கொண்ட பொறிகள் மற்றும் கருவிகள் என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். எனினும், கட்டடப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் 2017 சனவரியில் சிறிதளவால் அதிகரித்தமைக்கு இரும்பு, உருக்கு, மரம் மற்றும் மட்பாண்டப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளே காரணமாகும்.

2017 சனவரியில் இந்தியா, சீனா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறின.


## அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)


| வகை | சனவரி 2016 (ஐ.அ.டொ. மில் | சனவரி 2017(அ) (ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **343.5** | **358.8** | **4.4** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 118.6 | 143.6 | 21.0 |
| மரக்கறிகள் | 44.3 | 38.6 | (12.8) |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 9.6 | 22.0 | 129.5 |
| பால் உற்பத்திகள் | 18.1 | 21.1 | 16.7 |
| கடலுணவு | 15.9 | 18.2 | 14.1 |
| தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் பொருட்கள் | 1.8 | 12.7 | 596.5 |
| வாசனைத் திரவியம் | 10.9 | 9.5 | (12.9) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 18.1 | 21.5 | 19.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 224.9 | 215.2 | (4.3) |
| வாகனங்கள் | 86.9 | 66.0 | (24.1) |
| மருந்து மற்றும் மருந்தகப் பொருட்கள் | 41.5 | 38.9 | (6.3) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 96.4 | 110.3 | 14.4 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **801.2** | **950.1** | **18.6** |
| எரிபொருள் | 174.8 | 282.2 | 61.4 |
| இதில் மசகெண்ணெய் | 45.3 | 41.4 | (8.6) |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 101.5 | 204.7 | 101.6 |
| நிலக்கரி | 28.0 | 36.1 | 29.0 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 24.7 | 69.0 | 179.2 |
| இதில் தங்கம் | 15.5 | 64.1 | 314.8 |
| அடிப்படை உலோகங்கள் | 30.9 | 38.4 | 24.2 |
| தாள் மற்றும் அட்டைப் பொருட்கள் மற்றும் அதன் பகுதிகள் | 42.5 | 34.1 | (19.9) |
| கோதுமை மற்றும் சோளம் | 43.0 | 30.7 | (28.7) |
| ஊர்திகள் மற்றும் பொறி உதிரிப்பாகங்கள் | 21.5 | 28.7 | 33.4 |
| வளமாக்கி | 11.8 | 4.2 | (64.7) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 4.7 | 3.4 | (28.3) |
| ஏனையவை | 447.2 | 459.6 | 2.8 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **443.9** | **432.2** | **(2.6)** |
| பொறி மற்றும் கருவிகள் | 255.5 | 250.6 | (1.9) |
| கட்டடப் பொருட்கள் | 135.0 | 136.0 | 0.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள | 52.6 | 44.3 | (15.8) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.9 | 1.4 | 57.7 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.5** | **57.3** | **11,678.9** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,589.1** | **1,798.4** | **13.2** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

### வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

#### வர்த்தக நிலுவை

2017 சனவரியில் வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை கணிசமாக அதிகரித்தமைக்கு இறக்குமதிகள் மீதான உயர்ந்த செலவினமும் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இதற்கமைய 2017 சனவரியில் வர்த்தக நிலுவையில் பற்றாக்குறை 2016 சனவரியின் ஐ.அ.டொலர் 691 மில்லியனிலிருந்து 2017 சனவரியில் ஐ.அ.டொலர் 934 மில்லியனுக்கு விரிவடைந்தது.

#### சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்

2017 சனவரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் தொடர்ந்தும் உத்தேவத்தினைக் காட்டி 219,360 ஆக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. 2017 சனவரியில் சுற்றுலா வருகைகளின் முதல் மூலங்களாக இந்தியாவின் இடத்தினை சீனா பிடித்துக்கொண்ட வேளையில் மற்றைய பெரிய மூலங்களாக ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்சு என்பன விளங்கின. 2017 சனவரியில் இவ்வைந்து நாடுகளும் 2017 சனவரி காலப்பகுதியின் மொத்தச் சுற்றுலாப்பயணிகளின் வருகையில் 48.1 சதவீதத்திற்கு வகைகூறின. சுற்றலாவிலிருந்தான[1] வருவாய்கள் 2017 சனவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 376.3 மில்லியனுக்கு 12.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

#### தொழிலாளர் பணவனுப்பல்கள்

முன்னைய ஆண்டுப் பகுதியில் அவதானிக்கப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களின் மெதுவான பெறுகைகள் மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட மோசமான பொருளாதார புவிசார் அரசியல் நிலமைகளின் காரணமாக 2017 இலும் தொடர்ந்தன. இதன் விளைவாக, தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2017ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

அடிப்படையில் 2016 சனவரியின் ஐ.அ.டொலர் 563.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017 சனவரியில் ஐ.அ.டொலர் 571.6 மில்லியனுக்கு 1.4 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தன.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

2017 சனவரியில் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 11.0 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. இது பெரும்பாலும் முழுமையாகவே இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சலைப் பிரதிபலித்த வேளையில் முதலாந்தரச் சந்தைக்கான உட்பாய்ச்சல் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படவில்லை. இது, இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான முன்னைய ஆண்டின் கடைசி ஒரு சில மாதங்களாக அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக அரச பிணைகள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் 2016இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 118.3 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2017 சனவரியில் ஐ.அ.டொலர் 150.7 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. 2017 சனவரியில் பெறப்பட்ட அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் 2017 சனவரியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 5.3 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 24.4 மில்லியனுக்கு அதிகரித்தன.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2017 சனவரி வரையிலான ஆண்டு காலப்பகுதியில், திரண்ட சென்மதிநிலுவை 2016இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 619.3 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 211.7 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணி வீத அசைவுகளும்**

இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2017 சனவரி இறுதியில் ஐ.அ.டொலர் 5.5 பில்லியனாக விளங்கி 3.3 மாத இறக்குமதிக்குச் சமமானதாகப் காணப்பட்ட வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனாக விளங்கி 4.6 மாத இறக்குமதிக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

2016இல் ஐ.அ.டொலருக்கெதிராக 3.8 சதவீதத்தினால் தேய்வடைந்த ரூபா, 2017 மே 03 அளவில் ஐ.அ.டொலாருக்கெதிராக 1.4 சதவீதத்தினால் மேலும் தேய்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளை பிரதிபலிக்கும் விதத்தில் ரூபா, யூரோவிற்கெதிராக 4.9 சதவீதத்தினாலும், இந்திய ரூபாவிற்கெதிராக 6.8 சதவீதத்தினாலும் ஸ்டேர்லிங்பவுணுக்கெதிராக 6.4 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னுக்கெதிராக 5.1 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலிய டொலருக்கெதிராக 5.1 சதவீதத்தினாலும் தேய்வடைந்த வேளையில் கனடிய டொலருக்கெதிராக 0.4 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

## அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு [அ]

| வகை | சனவரி 2016 ஐ.அ.டொ. மில் | சனவரி 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 898.6(ஆ) | 864.7 | -3.8 |
| இறக்குமதிகள் | 1,589.1 | 1,798.4 | 13.2 |
| வர்த்தக மீதி | -690.5(ஆ) | -933.7 | 35.2 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 333.3(ஆ) | 376.3 | 12.9 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 563.4 | 571.6 | 1.4 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | -18.9 | -11.0 | -41.8 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 90.4 | 200.4 | 121.6 |
| இதில், | | | |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 13.2 | 82.8 | 526.3 |
| நீண்ட காலக் கடன்கள் | 72.7 | 117.3 | 61.4 |

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் கூட்டுக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

(உ) கூட்டுக் கடன்கள் நீங்கலாக.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.